# <u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>
# <u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>
# <u>District Munsif, Arni.</u>
# <u>O.S.180/2009</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W. 3 சுப்பிரமணி, வயது 75, த/பெ முருகன்**

**நேரம் - 11.20**

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 2 முதல் 5 தரப்பு)</u>**

முனுசாமிக்கு தாவா இடம் எப்படி வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி எப்போது தாவா சொத்தை வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய கொள்ளு தாத்தா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் கொள்ளு தாத்தா காலத்திலிருந்து சொத்துக்களை வாய் மொழியாக பிரித்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வாய்மொழியாக பிரித்த சொத்தைதான் அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். என் கொள்ளு தாத்தாவை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சொத்து எப்படி வந்தது என்று என் மூதாதையர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பத்திரம் எதுவும் இல்லை.

**பிரதிவாதிகள் 2 முதல் 5 வரையானவர்கள் வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 11.30**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni